

# "ஞான அமுதமும்"!!!
# &
# "ஓர் ஸத்ஸங்கமும்"!!!

## இதழ் I



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# “ஞான அமுதமும்”!!!

# &

# “ஓர் ஸத்ஸங்கமும்”!!!

இதழ் I

# பொருளடக்கம்


1. சிவனா? சிவமா?------------------------------------------2
2. படிப்பா? கல்வியா?----------------------------------------8
3. மண்ணா? பொன்னா? --------------------------------------15
4. ஸ்ரீபகவானா? பரமா?---------------------------------------24
5. சிருஷ்டியின் விபரம் ----------------------------------------36
6. யோகி, ஸித்தர்களின் வரலாறு -----------------------------37
7. யோகிகளுடன் உரையாடல்---------------------------------44


எல்லாம் நீ!



ஸத்ய வாக்கை (1)

ஸத்தியம் பேசு.

தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால், தர்மம் நிலை பெறும்!

ஸ்ரீ குரு திருவடி துணை! நம்பினோர் கெடுவதில்லை!

தெய்வம் மனுஷ்யாணாம்! யத் பாவம் தத் பவதி!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்" ஓம்!

"அஹம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்!"

"ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை!"

குரு **நம்பிக்கையில்!** பரி பூரணமான,

**வைராக்கியம்!** தொண்டும்,

அவர் **வாக்கிய ஸிரத்தையும்!**

கொண்டோர் **ஆத்மானந்த** குழந்தைகளே!

இந்த இதழில் **ஞான அமுதம்** &

அன்பின் குடிலில் நடந்த ஓர் **ஸத்ஸங்கமும்!** மின்னுது.

பாடம் படிப்பு வேண்டாம். உன் மெய்யில் உணர்வு வேண்டும் பாரு.

②



# சிவனா? சிவமா?

ஓர் நாள், ஓர் அன்பருக்காக, குடிலிலுள்ள அன்பர், சிவயஞானனுபவ பாராயண நூல் கேட்கிறார். தாங்கள் கொடுக்கலாமா? எனக் கேட்டார்?

வைத்தியம் :- யார் அந்த அன்பர்?

அன்பர் :- ஓர் நபரை சுட்டிக்காட்டி (அவர் தந்தையின் நாமா சிவா போலும்?) சிவா அவர்களின் மகன் என்றார்.


வைத்தியம் :- குடிலுக்கு எப்போது வந்தான்? எத்தனை முறை வந்திருக்கிறான்? தெரியுமா?

அன்பர் :- இதுதான் முதன்முறை. அவர் அப்பாதான், பழைமையானவர் என்றார்.

வைத்தியம் :- ஒருமுறை வந்தவருக்கு, எப்படி அந்த அத்வைத நூல், கொடுக்கக்கூடும்? பலமுறை வந்து, (விஷயம் என்ன?) அனுபவம் என்ன? அவர் என உணர்ந்த பின்தானே, கொடுக்க வேண்டும்? ஆகவே, அவரை சமாதானப்படுத்தி பலமுறை வரச் சொல். அதன்பின், அவன் நிலையை உணர்ந்து, **அவன்** கொடுப்பான் என்றோம்.

அன்பர் :- (என்ன எண்ணறோ? என்ன தோன்றியதோ?) நம்ம **சிவா**வின் பையன் தானே என்றார்?

(அங்கே அப் வைத்தியம், எந்நிலையில், அதை சொல்லியதோ அதை அவனே அறிவான்!)



வைத்தியம்:— அந்த **சிவனே**! வந்தாலும், கொடுக்கமுடியாதுதான்! கொடுக்கக் கூடாதுதான். **பக்குவம்** இல்லாதவன், **அதனை** நாடி, தொடவாகாது. அது தவறான வழியைக் காட்டும் என, எம் **தர்மத்தை** சொன்னோம். இது நடந்து முடிந்தபின், இந்த வைத்யப்ரதேசி வைத்தியம், பகலில் தனியாக, இருந்து ஏதோ, எழுதிக் கொண்டிருக்கும் போது!!! திடீர் என, ஸ்ரீ சிவபெருமான் பிரத்தியக்ஷமானார்.


வைத்தியம்:— (ஸ்ரீ பாத நமஸ்காரம் செய்து, அடங்கி ஒடுங்கி) (என்ன பண்ணுவேனா! பொன்னம்பலத்தவா! சந்திர சேகரா! ஜடாதாரி! திரிசூலதாரி! சங்கரா! சாம்பவா! திரிநேத்ரா! திரியம்பகேசா! என கண்ணீர் ஓடி, அழுது கொண்டிருக்கும் போது, இடைமறித்தார்)

பெருமான்:— என்ன பாபா! எம்மை யார் என்று நினைத்தாய்? சற்று முன் உன் உரையாடலில், அந்த **சிவனே** வந்தாலும், கொடுக்கமுடியாது! அதனை நாடி, என்றாயே? யாம் **தருகி** இல்லாதவனா?



இதன் ரகஸ்யம் (ஃ)
என்ன வென்றால்
திரிகர்த்தாக்களும்
அவரவர் படைக்கலங்
களோடு (ஆயுதங்களோடு)
இருக்கும் சமயம் அவர்கள்
பிரவர்த்தியின் சொரூபமே!
நிவர்த்தியின் சொரூபமாக மாட்டார்கள்.
ஆகவே நிவர்த்தியின் நூலாகிய நாடகம்.

வைக்கியம்:- தயை செய்து மன்னிக்கவும். இந்த
ஐந்து சொற்களுக்கு என்ன வென்றால்?
தாங்கள் இப்போது வந்திருக்கும் தோற்றம்:-
சூலம்! கபாலம்! மான்! மழு! இது **ஜீவ**
**ரகஷியத்தை** காட்டுகிறது.
ரஷியப்படி, தொழில் கர்த்தாவான, தாங்களுக்கே,
**பிரவர்த்திதானே** முக்கியமானது?
**நிவர்த்தி** மார்க்கமான, **அத்வைத**
நூல் தேவை இல்லையே, என்றுதான், அப்படி சொன்னோம்.
தாங்களோ! இந்த நான்கையும் தூர எறிந்துவிட்டு,
யோக **தண்டம் கமண்டலம்!**
இவைகளை, ஏந்தி வந்தால், அது வைக்குருசைதன்யமாகும்.
அந்நியயால், அந்த நூலை, கேட்க மாட்டோர்கள்! ஏன்
என்றால், அந்த நூலின், அனுபவ **கருத்து** நாம் எனைக்கி
விருவீர்கள். அங்கு நூல் தேவையில்லையே! மேலும்
உங்களுக்கு, பிரவர்த்தி இருக்கும் போது, நிவர்த்தியின் நிலை,



அத்வைதநூல் ⑤
அவர்களுக்கு,
உகந்ததன்று, என்று
ஸ்ரீமஹான்கள் சொல்வர்.
அம்மேருஞ், **குரு**
ஸ்தானமாகிய யோக
நூல்! கமண்டலம்!
தாங்கி நின்று விமட்டமே,
அவர்கள் அத்வைதநூல்,
ஏற்க தகுதி உடையவர்கள் என்று, ஸ்ரீமஹான்
கள் சொல்ல கேள்விப்பட்டுள்ளேன். முடிந்தது.

வாய் ஞானமாகத்தானே இருக்கிறது? அது அனுபவ ஞானமாகாதே? எவனொருவன் பிரவர்த்தியை விடுகிறானோ, அவனே நிவர்த்தி மார்க்கத்தின் அதிகாரி ஆகிறான்.

பெருமான் :— ஆமாம்பாபா! சிவன் வேறு! சிவம் வேறு! என பேதம் பிரிக்கிறாயா பாபா?


வைத்தியம் :— ஓம் ஐயனே! பரமசிவா நிதி! தயாபரா! அப்படி நாங்கள் எண்ணவேண்டாம். இவ்வேஷத்தை மன்னிக்கவும் இவ்வுடலில் **தொழிலால்** மட்டும், பேதமேயன்றி, **இருப்பில்**! எந்த பேதமுமே, இல்லையே வைத்தியம்!

பெருமான் :— அப்படியானால், எம்மை எப்படி உணர்கிறாய்? தொழிலால் பந்தப்பட்டவனா? பந்தம் இல்லாதவனா?

வைத்தியம் :— ஹே சர்வலோக சரண்யா! சர்வஜீவ தயாபரா! தாங்கள் என்றென்றும்,

**நித்திய முக்தனே**! தாங்கள், அறிவு சொரூபமாக இருப்பதால், இயக்க நிலையில் ஸ்ரீபகவானாகவும்! இங்கு **மாயா** உண்டு! **மனம்** இல்லை!

⑥



பரமான

இருப்பு நிலையில், **மாயா** இல்லாத தொழில்

இல்லாத ) நிலையில், **ஆத்மாவாகவும்**,

இருப்பு நாவ், தாங்கள் நிற்கிய முக்தனே!

பரமன்:— ஓர் முக்கிய கேள்வி? உனக்கு **சிவன்** வேண்டுமா? வேண்டாமா?

வைக்கியம்:— ஹே பிரபோ! கருணைக் கடலே! ஆனந்த ஸாகரமே! காருண்ய மூர்த்தியே! கொஞ்சம் கருணை காட்டுங்கள். இப்போது, இந்த கேள்வி தேவையா?


பரமன்:— எப்படியோ பாபா! இக்கேள்வி வந்து விட்டது? விடை காணும் வரை, இக்கேள்வி முடியாது!

வைக்கியம்:— ஹே பிரபோ! அவஸியம், இக்கேள்விக்கு, விடை தெரிந்தே, ஆக வேண்டுமா?

பரமன்:— ஆமாம் பாபா! விடை தெரிந்தே ஆக வேண்டும்?

வைக்கியம்:— **எல்லாம் நீயே! எல்லாம் நீரே!**

அகண்டாண்ட பாவனையாகிய! அதாவது சர்வசாட்சி பாவனையாகிய! அதாவது **பேரறிவு** சொரூபமாகிய! **நம்** இருப்பு ஸ்தானத்திலிருந்து பதில் வந்தது.



அதன் பதில்:— **அன்பும்! அறிவும்!**

ஒருருவான நிறைந்தாய்! பரமேஸ்வரா! அறிவே ஆன்மா!
ஆன்மாவே அறிவு! **உன்** இருப்பு! நாம ரூப, ஜக
ஜீவ, ரசாதிப்பின் நிமித்தமான, அறிவாகிய ஸ்ரீ பகவான்
ஆகும். இதுவே, அனுபவ ஸ்ரீமஹான்களின் வாக்கு.
**எம்** இருப்பு! நாமரூப, ஜக ஜீவ, தோற்றம் அனைத்தும்
**மண்ணுக!** உணர்ந்த, **பேரறிவாகிய**
**பர** சொரூபமாகும்!
இந்நிலையில் **சிவன்** என்ற நாம ரூபம் வேண்டாம்.
இந்நிலையில் **சிவமாகிய! யாவும்!**

**நீயும்** எந்த நாமரூப பேதமும் இன்றி ஆனந்தமாக இருக்கிறோம்.
ஆகவே இது வேண்டும் என்ற, விருப்பமும் இல்லை.
இது வேண்டாம் என்ற வெறுப்பும் இல்லை. ஆகவே இந்த
விருப்பும் வெறுப்பும்! அற்ற ஆனந்தமாகவே **நாம்**
இருவரும் இருக்கிறோம். அதனால்
வருமானம் காணவில்லை. ... பரமா.

நன் குடும்ப, தொழில்,
வாழ்விற்கு! நம்
வாக்கே காரணம் என்று,
எவரும் உணர்வதில்லை.
இதை சத்தியமாக உரையும்
உங்கள் வாக்கே: வாழ்க்கை!
அமிர்தம்! அக்னி! வரம்
சாபம்! புண்ணியபாபமும்!
தொடரும்.



# படிப்பா? கல்வியா?

ஓர் குழந்தை, படிப்பிற்கும்! கல்விக்கும்! என்ன வித்தியாசம் என கேட்டது? அதை கேளுங்கள்?

குமார:— ஜெயபாரதி! நாங்கள் மடல்களிலும்! வாக்கிலும்! படிப்பு வேறு! என்றும் கல்வி வேறு! என்றும் வருகிறதே! படிப்பு இல்லாமல், இவ்வுலகில் வாழ முடியாதே! வாழாமல் சாதனை எப்படி செய்வது? இதை கொஞ்சம், விளக்கினால், நலமாக இருக்கும்?

வைத்தியம்:— குழந்தே! உன் படிப்பினால், நீ பெறுவது என்ன? அதை முதலில், சொல்லப்பார்ப்போம்?

குமார:— ஜெயபாரதி! படிக்கவிட்டால், பட்டம் பெறலாம்! பட்டம் பெற்றுவிட்டால் டிகிரி வாங்கிவிட்டால்) கொஞ்சம் உயர்ந்த! வேலை கிடைக்கும். உயர்ந்த வேலையிலிருந்தால், கூடுதல் வருமானம் வரும். கூடுதல் வருமானம், வந்தால், குடும்பத்தை சிரமம் இல்லாமல் நடத்த முடியும்! குடும்பம் சிரமம் இல்லாமல்! பிரச்சனை இல்லாமல்! டென்ஷன் இல்லாமல் இருந்தால், ஸ்ரீமக வாழ்வும், எண்ண முடியும்! சாதனையும் பண்ண முடியும்!



உங்கள் வாக்கே :- (9)


பலிதம்! பயம்!
தேவ தெய்வ அருளாலும்
உங்கள் வறுமை பிணிக்கு
காரணம். அதேபோல்
உங்கள் வாக்கே காரணம்
பேசும்போது நல்ல நெறி
யாகவே பேசுவதோடு நீங்கள்
பின் நல்ல தருமாறும் போது
நாம் தான் காரணமென்று உணராமல் தெய்வத்தை
யும் தேவனையும் நொந்து கொள்கிறீர்கள்.
தொடரும்.

வைத்தியம் :- குழந்தாய்! கமலா! உன்னிடம்
**கேட்க**! அதற்காகத்தான் இருக்கிறது.
நீ **எண்ணியபடி** படிப்பும்! பட்டமும்!
பணமும்! குடும்பமும்! வாழ்க்கையும்! பின் பக்தியும்!
சாதனையும்! அமையும் என்பது திடமாக உனக்கு,
உறை முடிகிறதா?

கமலா :- ஏன் முடியாது பாபா? முயற்சி உடையார்
இகழ்ச்சி அடையார்! என்றும், முயற்சி திருவினை
யாக்கும்! எனவும், நம் முன்னோர் சொல்லிருக்கிறார்களே,
அது சத்தியம்தானே?

வைத்தியம் :- சத்தியம்தான்! நாம் ஒப்புக் கொள்
கிறோம். இவ்விரண்டின் **உள்கருத்தை**
உணர்வாய் போலும்? இறை முயற்சி உடையார்,
இகழ்ச்சி அடையார்! என்றும்,
உன் முயற்சியை, **திரு**! என்ற, இறைவன்தான்
செய்கிறேன்! அதாவது செய்ய முடியும்! அதாவது,
உன் மூலம் செய்விப்பான் எனவும், பொருள் இருப்பதை
மறந்து விட்டாயா?

(10)



இறை குரு உணர்வோருடைய பேச்சில் வார்த்தை மாறாது. வார்த்தை சிதறாது. ஆகவே நான் அடிக்கடி சொல்வேன் அடங்கு! அடக்கமாகு! எனச் சொல்கிறேன். பேசிய வார்த்தை வாயிலிருந்து புறப்பட்ட அம்பு போன்றதாகும். அந்த அம்பு விடை இருக்காது அவசரத்தாலே. அங்கு விடை இல்லையே திரும்பி உள்ளேயே நாக்கைக் கவனத்தோடு மடக்கு.

குமார்:— ஸ்ரீபாபாஜி! இப்படி யாரும் சொல்லவில்லையே. பாபா! பள்ளியில் உபாத்தியாயரும் கூட இக்கருத்தை உரைக்கவில்லை போலும்?

வைத்தியம்:— அது போகட்டும் கொடுத்தேன்! உன் வாக்குப்படி, படித்தோர்க்கான் பட்டம்! பதவி! வேலையின் திறன்! எனச் சொல்லி முடிக்காயே, இவைகளில் அதன் பலன்! அதன் வாழ்க்கை! ஏதேனும் ஒன்றுவது **பகவான்** உணர்த்துகிறதா? எனக் கவனித்தாயா?


குமார்:— இல்லையே பாபா!

வைத்தியம்:— ஸ்ரீபகவானை உணர்த்தாத இவைகள் காவல் வரும் சமயம், நம்மை என்ன செய்யமுடியும்? இவை உதவுமா?

குமார்:— உண்மைதான் பாபாஜி! உதவாதுதான்.

வைத்தியம்:— இவ்வுலகின் சகல ஐசுவரியங்களும் **ஆடம்பரம்** தானே? ஓர் வெளிப்பகட்டு தானே? உனக்கு ஆடம்பரம் வேண்டுமா? **அமைதி** வேண்டுமா?

குமார்:— அமைதிதான் வேண்டும் பாபா! அமைதி இல்லாத வாழ்க்கை இருப்பது **நரகம்தானே** பாபா?



# மனமே

(11)

லௌகீகம்!
வைதிகம்!
பரமார்த்திகம்!
என மூன்றிலும்
உபகாரமும்! அபகாரமும்!
ஆகும். பரமார்த்திகத்தில்
மனமும் அதன் செயல்களும்
இல்லை என்பது ஸத்தியமே!
பாவனையால் மனம் வேண்டும்.
அதுவே மனமே வேலை செய்யும்.
தொடரும்.

## அப்பியாசு

வைத்தியம் :– இதை மாற்றிப்பார்த்தாய்!
ஆடம்பர வாழ்வு, என்பது நரகம் தானே? அது **நகரம்**
நரகமே? அதுசேவையா?

கமலா :– நரகமாகிய நகரம், சேவை இல்லையென்றால்,
எப்படி வாழ முடியும்?

வைத்தியம் :– இதனை மாற்ற வேண்டாம். அதன்
இயல்பை மாற்று!


கமலா :– புரியவில்லையே பாபா!

வைத்தியம் :– வாக்கில் இனிமை! வாழ்க்கையில் எளிமை!
சாதனையில் பொறுமை! பார்வையில் கருணை! எதிலும்
இதுபோதும் என்ற நிறைவு! இவை அனைத்திற்கும் மேலாக
ஸ்ரீ பகவான்! உண்டு என்ற **நம்பிக்கை**!
இவைகளே, **கல்வி** ஆகும்.

கமலா :– ஆமாம் பாபா! வினை! மனம்! என இரண்டை
குறிப்பிட்டு, பயமுறுத்துகிறீர்களே! அவை இரண்டும்,
லௌகீக **படிப்பின்**! நிழலாய் இருந்தால், நாம்
என்ன செய்ய முடியும்?

வைத்தியம் :– இது நியாயமான கேள்விதான். வினை! உடல் உன்!
சம்பந்தத்தால், பிணைக்கப்பட்டு இருக்கும். ஆனால் உன் மனத்தை
அவன் வசம் ஆக்கலாமே?

(12)



அங்கு இந்த மனமானது தெருணமாகிய ஸத்வத்தை ஏற்றுக் கொண்டால்; எந்த கர்மமும் இல்லாத பரமாத்மத்தில் ஒன்றி விட்டுவிட்டு இந்த மனம் தானே மறைந்து விடும். உண்மை முயற்சியால் உன் வெளிக்க மனமே தெய்வீக அறிவாக மாறுகிறது. உன் தெய்வீக அறிவே பரமாத்மத்தில் திரும்

தொடரும்.

தேவார்:- புதிய விலியேயாமா! சரியான விளக்கம் கொடுக்கப்பார்ப்போம். இதோ

வைத்தியம்:- இதை இந்த, **ஞாலம்** உணர்க.

தெய்வத்தால் ஆகாது எனினும் - **தன்** முயற்சி

**மெய்வருந்(த) கூலி** தரும்.

என்பது, எம் வள்ளுவன் வாக்கு. இதை கவனி! தெய்வத்தால் ஆகாது எனினும்! என்றால், உன் **விதி**

அப்படி **விதி**யின் நிலையால், அமையவில்லையென்றாலும், தன் முயற்சி என்பது சர்வாரம்பணம் ஆகும். இதில் ஒரு நம்பிக்கையாகவும்! உறுதியான வைராக்கியமாகவும்; **ஆடம்பரம்** வேண்டாம்! **அமைதி** வேண்டும் என்றும்! இங்கு நாமரூப விண்ணப்பமோ, வேண்டுதலோ, எதிர்பார்ப்போ இல்லை. உன் யதார்த்த ஸத்வத்தை நாடு இருப்பு. இது வியாபாரம் விளம்பரம் இல்லை. உன் **யதார்த்தத்தை** நீ விரும்பும் போது.



# பேரறிவா (13)

க பாயும் ஆற்றல்
உள்ளதென தெளிதல்
ஆகவே ஞானமே!
அறிவு, அறிவே, பேரறிவு,
அதுவும் அதீதமான் முடிந்து
பிணம் சுடுதடி போல் அகண்ட
பாணத்தில் கரைந்து கலந்து/மெய்யாகிவிடும்.
ஆகவே மனமானது மௌனத்தானதாகும் முடிந்தது.

மெய் வருந்த கூலி தரும் என்றும், மெய் வருத்த கூலி தரும் என்றும், திருநீலகளில், ஸ்ரீ பகவான் கிருபை கிட்டும் என்கிறார்.

நீ வருந்தி கேட்க வேண்டும்:- நீ உள்ளம் உருகி, ஏங்கி மனம் வருந்தி, கேட்க வேண்டும்.

இங்கு ஸ்ரீ பகவான், உன் தலைவினைகளை, சற்று

**வருத்தி** (வருத்தெடுத்து) அதன் **பலனை**

அவசியம் தருவான். அப்படி வருத்தெடுக்கும் போது,

**தோன்றாத்துணையாக**வும் அவன் இருப்பான்.

(தெய்வம் நேரடியாக தோன்றுது! மறைமுகமாய் செய்வதை, உணர முடியும்)

குறிப்பு:- என் அருமை பாபா! படிப்பும், கல்வியும், உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை, மட்டும் இவ்வரிகளால் விளக்கங்கள் பார்ப்போம்?

(A) படிப்பு:- பாடம், படிப்பு, பட்டம், பதவி, பணம், அந்தஸ்து, கௌரவம், புகழ், ஆடம்பரம், விளம்பரம், தடிப்பு & திமிர் யாவும், இப்படியாக, அனைத்தும் தருவது படிப்பாகும், ஆனால்

**அமைதி**யான! **ஆனந்த**மான! வாழ்வையும் அந்தத்தையும் கொடாது.



ஆனால் இன்றைய கலியுகத்தில், (14)
கல்வி சேவை இல்லாமல்
போய்விட்டது! ஆனால்
படிப்பே பிரதானமாய்
இருந்து அறிவுப் பாதையை
நோக்கி அதிவேகமாக
சென்று கொண்டிருக்கிறது. இதைமாற்றவோ!
மறுக்கவோ! எவராலும் முடியாது.
இதுவே கலியுக தர்மம்.

இன்னும் மேலாக படிப்பு! **வித்துவம்!**

படிப்பின், அகங்காரமான, செருக்குத்தன்மையை கொடுக்கும்.


இது **அமைதியின் அழிவுப்** பாதையாகும்.

(B) கல்வி:- கற்றதனால் ஆயபயன், என் கொல்?
வாலறிவன் **இறைவன்** நற்றாள் தொழாரெனின்?

என்ற குறள் வாசகப்படி, (கல்வியே கடவுளை உணரும்படி அறிவதாகும்)
இறைவனை அறியவில்லையானால், உன் கல்வி வீணே ஆகும்!
மேலும் கல்வியானது, இறை நம்பிக்கையும், அந்த இறை நம்பிக்கையால் பெறும், **இறை** ஆதரவான, பொருளும் தரும்.
மேலும்
பொறுமை! கருணை! எளிமை! இனிமை! பணிவு! அடக்கம்!
கனிவு! தாருண்யம்! குற்றம் குறைகளை மன்னித்தல்! மறத்தல்!
விட்டுக்கொடுத்தல்! எதையும் சகித்துக் கொள்ளல்! சாந்த
அமைதி! ஆனந்தம்! என, இறை உணர்வுடன் கூடியதால்!

**குற்றம் குறை** நீங்கக் கற்பதும்!
நீக்கக் கற்பதும்!
**கல்வி** ஆகும் என, ஞானிகள் சொல்வர்.

பாபா



# மண்ணா? பொன்னா?

வைத்தியம் :— அம்மா ராஜம்! மண் முந்தையதா? பொன் முந்தையதா?


ராஜம் :— இதென்ன கேள்வி பாமா? மண்தான் முந்தையது. மண்ணிலிருந்துதானே பொன் வந்தது?

வைத்தியம் :— மண்தான் முந்தையது என்றால், பொன் மேல், ஏன் மோகம் உண்டாகிறது?

ராஜம் :— எளிமையான பாமாவே! பொன்னாலே **பகட்டாகவும் மதிப்பும்!** பெறுவதால், பொன் மேல் மோகம் உண்டாகிறது.

வைத்தியம் :— தெரிந்ததே! ராஜம்! பொன் மேல் மோகம், என சொன்னாயே, அந்த மோகம் **பொன்னிடமா? மனதிடமா?**

ராஜம் :— நம்பாபா! ஏதோ சுற்றி வளைத்து, நம்மை மடக்கப் பார்க்கிறீர். நாம் கவனமாக இருக்க வேண்டும். அன்பான பாமாவே! பொன்னிடம், கவர்ச்சிகரமான ஓர் **தோற்றமும் அழகும்** இருப்பதால், அம் மோகம்! மனதிடமே உண்டாகிறது. பொன்னிடமில்லை.



(16)

வைத்தியம் :- கேள்வியிலிருந்த எம் ராஜம்! கவர்ச்சியும் & அழகும்! அப்பொன் ஏற்று வந்ததா?


அல்லது, உன் மனம் கொடுத்ததா?

ராஜம் :- ஐயா ஐயா! பொன் வெறும் ஜடம்தானே? அது எப்படி, கவர்ச்சியையும், அழகையும், தரும்? நம் மனம்தான், அப் பொன்னுக்கு, கவர்ச்சியும், அழகும் கொடுத்தது.

வைத்தியம் :- சரி சொன்னதே! பொன்னு ஜடம் என்று சொல்லிவிட்டாய். அது பகுத்துப்பார்த்து, சொல்லியவே! ஆனால் உன் மனம்! ஜடமா? உயிர் உள்ளதா? (கவனம் தேவை?)

ராஜம் :- (பாபாவிடம் மாட்டிக் கொண்டோமே? மனமே எண்ணம்! எண்ணமே மனம்! இந்த மனம் என்பது ஜடமா? உயிரா? ஓர் போராட்டமே எழுந்தது, அவர் மனதில்? ஸம்சயமே என ஸம்சயித்தார்)

பின்பகலில் வந்தது :- ஹே கனிவான பாபாவே! நம்மனம் ஓர் உயிரோட்டமானதே






வைத்தியம்:- மனம் என்பதே எண்ணம் தானே ராஜம்! ஒரே நாமரூபம், தோற்ற வடிவியானால், இந்த மனம் எது? எண்ணத் தால் **வந்து போகும்** மனதை! எப்படி உயிர் உள்ளதென சொல்கிறாய்?

ராஜம்:- ஓ சாமர்த்தியபாபா! **வாக்கால்** எம்மை மடக்கப் பார்க்கிறீர்கள்! நீங்கள் **எங்கு** வருகிறீர்கள் என, உம் கருணையால், எமக்கு தெரியும்?

வைத்தியம் புன்னகை சிரித்து விட்டு அவர் தொடர்ந்தார் யாம் மனம் உயிர் உள்ளதென்று! சொல்லவில்லை. **உயிர் ஓட்டமானது** என்று தானே சொன்னேன்?

வைத்தியம்:- ஓம் ராஜியான ராஜம்! இரண்டும் ஒன்று தானே? அதாவது உயிர் உள்ளது என்பதும்; உயிர் ஓட்டமானது! என்பதும்; ஒன்று தானே? அதை ஏன் மாற்றுகிறாய்? மறுக்கிறாய்? நன்கு கவனித்து பதில் சொல்?

ராஜம்:- ஹே பாபா ஜி! உங்கள் கவனக்குறைவுதான், யாம் கவனமாக இருக்கிறோம்! எங்கே தனிக்கவனம் ஏது?




மனம் அடங்கினால் பிராணன் என்ற (18)
உயிர் அடங்கும்.
அடங்கும் என்றால்
பிராணன் ஓட்டம்
ஒருகட்டத்தில் அடங்கும்

மனம் அடங்க வேண்டு
மானால் ஆசை அடங்க
வேண்டும். ஆசை அடங்க
வேண்டுமானால், ஸ்ரீபகவானிடம் சரணாகதி பூர்ணமாக
முழுமையாகவும்! உறுதியாகவும் இருக்க வேண்டும்.
தொடரும்.

வைத்தியம் :- சரிசரி! சரிசரி! உன் வாக்கியத்
திருத்து, விளக்கம் கொடுப்பாய் போலும்?

ராஜம் :- ஓம் கண்ணா! கண்ணா! பாபா ஜீ!

நாங்கள் **வாக்காலேயே!** உணர்ந்
ததையே சொல்கிறோம். இப்படி மறுப்பாக பேசுவதை,
மன்னிக்கவும் :- **உயிர்** என்பது பிராணன் தான்!
உயிரோட்டம் என்பது, மனதின் **ஆசை** ஆகும்.
ஆசை! அடங்கினாலே **மனம்** அடங்கும்!
மனம் அடங்கினால், உயிர் என்ற **பிராணன்** அடங்கும்
இது உங்களுடைய, சிவ **அனுபவம்!**
அதுவே எம்முடைய, அனுபவ **பாக்கியம்!** ஆகும்.
அது இனி அனுபவமாகிவிடும். வைத்தியம்.
அப்படியானால், ஆசைவசப்படும் மனம், ஓர் உயிரோட்டம் தானே?
பாபா! பொன்னு, அழகும் கவர்ச்சியும், உன் பெண்மையும், மனமே!
நான் உன்னை, கவர்ச்சியாலும்! அழகாலும்! மாட்டிக்
கொண்டதும் அம்மனமே!



உயிராகிய பிரா (19)
ணனுக்கும்; நாம
ரூப ஆசைக்கும் தொடர்பு
இருப்பதாலேயே. யோக
த்தாலும் பிராணனை அடக்
கலாம். தியாகத்தால்
ஆசை சர்வநாசமாகும்.
ஆசை சர்வநாசமானால்
பிராணன் அடங்கும். ஆகவே
உயிரோட்டம் என்பது பிராணனும்! ஆசைக்கும்
(ஓட்டம்) ஆசையையும் ஜெயிக்கும். முடிந்தது.

வைத்தியம்:— ஆசை வசப்படும் மனதை, ஓர் உயிரோட்டம் என்று சொல்லி விட்டாய். ஆசை அடங்கினால், மனம் அடங்கும் என்றும். மனம் அடங்கினால், பிராணன் என்ற வாயுவும், அடங்கும் என்றும், சொல்லி விட்டாய். இதுவரையில், **சிக்கலாக** முடிந்து விட்டது. இச்சிக்கல், எப்படி அவிழ்ந்து போகாமல், பிரித்து எடுப்பது? அதையும் சொல்வாயா? உன்னால் உன்ற, பாமரனென்ன சொல்கிறேனென்று பார்ப்போம்?

ராஜம்:— ஓ எளிமைக்கும் எளிமையான பாமரனே! இது சிக்கலொன்றுமில்லை. தெளிவிலும் தெளிவானதாகும்!

வைத்தியம்:— அம்மா ராஜம்! உன் **வாக்கு** சர்க்கரைதான்? அந்தச் சர்க்கரை! இனிக்க வேண்டாமா?


சர்க்கரையாக இனிக்கப் பேசினால் போதுமா? அந்த சர்க்கரை இனிக்க வேண்டாமா?

ராஜம்:— ஓம் அன்பான பாபா ஜீ! அறிவான பாபா ஜீ! எளிமையான பாபா ஜீ! ஆனந்தமயமான பாபா ஜீ! **தாங்கள்** வாக்கே **நம்** வாக்காகும்.



மண்ணும்! பொன்னும் (20)
ஜடமே! ஆனால்
மாயாவால் விளங்கப்
படுகிறது. விளம்பப்படு
கிறது. அங்கு மாயா இல்லை
யானால் மண்ணும்! பொன்னும்
தோன்றாமல்! தோன்ற இயலாது
ஆகவே அம்மண்ணையும் பொன்னையும்
அறியும் என்பது மாயாவால் முடியும்.
(அது இருப்புத்தன்மை) ஆனால் அதை சொல்லவோ!
விளக்கவோ முடியாது. காரணம் மனம் இல்லை.

ராஜம்:— சர்க்கரை என்று சொன்னால் **மதுரம்**
தோன்றுமா? சர்க்கரையை, வாயில் போட்டு சுவைத்தால் தான்,
மதுரம் தோன்றும்! அது போல?
நம் மனம், எண்ணங்கள் **வந்து போவது** ஆகும்.
அது **நிலையாய்** இருப்பதில்லை. அதே போல்,
மண்ணில் இருந்தே, பொன் வந்தது என்பது சத்தியமே!
மண் (மண்ணை இருக்கும் போது, அதன் நிலை **பரமே!**
அப்பரம், தனக்குத்தானே (தன்னுள்ளேயும்! தன் முன்னேயும்)
**மாயாவை** தோற்றுவித்துக் கொண்டு; அம்
மாயாவின் உதவியால், தன்னை **பொன்னாக்கி**
கொண்டது. இந்த ஓர் சத்தியத்தை உணரலாம்.
மண்ணும் (பரமும்) பொன்னும் (ஈசனும்) ஒன்றே!
ஆனால் அங்கு அம்மண்ணை, பொன்னாக்கிய மாயாவுக்கு,
மண்ணைப் போலும்! பொன்னைப் போலும்! **இருப்பு** இல்லை.



மண்ணை பொன் (21)
ஆக்கிய பெருமை
யோகமாயாவுக்கே
பொருந்தும். அப்பொன்னின்
ஆவரணம் என ஆக்கிய
பெருமை யோகமாயாவுக்
கும்! அதன் மைந்தன
மாயா மனதிற்கே பொருந்தும்

பொன்னை ஆவரணமாக்கியது யோக மாயாவாகும். அந்த ஆவரணத்தை சொந்தம் கொண்டாடிய பெருமை மாயா மனதிற்கே பொருந்தும்.

ஆனால் **இயக்கம்** மட்டும், சூக்ஷ்மமாக உள்ளது.


அவ்வியக்கத்தை, மண்ணும் பொன்னும் அறியும். ஆனால் (பொன்னும் மண்ணும்) இயக்கம் இல்லாதன்மையினால் அதை சொல்லவோ! அதை விளக்கவோ முடியாது.

பின் **அவ்விளக்க இயக்கத்தின்** நிமித்தம், மாயாவின் **மனம்** வந்தது.

இம்மாயா மனமே, மண்ணையும் பொன்னையும் விளக்கும் நிலையில் **மனவாக்காக** வழி வகுத்தது.

அம்மன வாக்காகவே, மண்ணுக்கும் (இருப்பான விளக்கமும்) பொன்னுக்கும் (இருப்பும் இயக்கமும்) இருப்பான இயக்கம்! விளக்கம் கொடுத்தது. இவ்விரு இருப்பும் இயக்கமும் கொண்டு பொன்னை! **ஆசையினால்!** பூக்க வைத்துக் கொண்டு (இருக்க வைத்துக் கொண்டு) அந்த ஆசையையே, **உயிரோட்டமாக** அதாவது பிராணனாக





22

பொன்னும், மண்ணும்! ஒன்றேயாகும். அம் பொன்னை ஒன்றும் செய்யாமல் மண்ணிலேயே போட்டு விட்டால் இவ்வுலகத்தில் அம் பொன்னும் மண்ணேயாகும். பொன்னை மண்ணாக்க நம் முயற்சி தேவையில்லை. ஆகவே பொன்னும் மண்ணும் ஒன்றே

பொன் பகட்டாகவும், கவர்ச்சியாகவும் தோன்றுவது மாயாவும் மனமும்! இவைகளுடன் ஒரு நாடகமாகவே முடிந்தது.

வைத்திருப்பது, இந்த மனமே! ஆகவே, ஆசை அடங்கின பின் உயிரோட்டமாகிய பிராணனும் அடங்கும். இவ்வோர் உண்மை.

மண்ணில் பொன் உண்டு! அதேபோல், பொன்னிலும் மண் உண்டு! (மண் பொன்றும்! பொன் மண்றும்)

ஆகவே பொன்னோ, மண்ணோ உண்மையென்றில்லை அதற்கு பெரிதல்ல! அறிவே பொன்னே! ஆவரணமாக (அசித்த நாமரூபங்களாக) காண்பதும்! அதுபற்றி பேசுவதும்! எண்ணுவதும் தான்! மனதின் சாமர்த்தியமாகும். இந்த நாமரூபங்கள் அனைத்தும் இம்மனதின் கற்பனையாலேதான், இருப்பும் & இயக்கமும்! பெறுகின்றதேயன்றி, வேறொன்றுமில்லை என, சத்தியமாக உணர்ந்து விட்டால் நாமரூபங்கள்! எங்கிருந்து வந்ததோ




பொன்னிலும்! மண்ணிலும்! (22)
ஆவரணம் என்ற நாம
ரூபம் இல்லை. ஆவரணம்
என்பது தேவையும்!
ஆசையும்! இணைந்த ஓர்
மனோ தோஷ குணா நாம ரூபம்!

ஆகும். பொன்னுக்கும்! மண்ணு
க்கும் பொன்/மண்/என்ற ஓர் நாமரூபம்தான் உண்டு.
மனோமயக்க ரூபம் இல்லை.

அந்த **பொன்னாசையே**! ஆகிவிடும்
என்பது சத்தியமே! ஆவரணம்/மயக்கம் நீங்கி,
எங்ஙனம் பொன்னாகிவிடாதோ அங்கே?
பொன்னும் மண்ணும் ஒன்றே! என்பதும்,
மண்ணும் பொன்னும் ஒன்றே! என்பதுமே சத்தியமாகிவிடும்
ஆக முடிவில், மண்ணுக்கு பொன்/அன்னியமில்லை/என்றும்
பொன்/மண்ணாகவே இருக்கிறது! ஆனால் இந்த மனம்
தான், மண்ணை **பொன்னாக**! மயக்கிறது என்பதும்
உண்மையாகிவிடும். இந்த விவகாரமும் அறிந்தும்,
மனதுடையதே! ஆனால் மண்/மண்ணாகவே இருக்கிறது.
பொன்னே! ஆவரணமோ! இல்லவே இல்லை. ஆகவே,
மண்ணை உள்ளது! மண்ணை அறிந்தது!/பொன் என்பதும்
ஆவரணம் என்பதும், மனதின் **குழப்பமே**!

ஹே அன்பான பாபா! இந்த ஏழையானை/உங்கள் பாத தூளியான
யாம்/எம் வாக்கில் ஏதேனும், தவறாக இருந்தால் தயவு
பொறுத்தருள வேண்டும்! என்று தன்னை முடித்துக் கொண்டது.
அந்த சத்தான குழந்தை!




# ஸ்ரீ பகவானும் பரமா?

<u>லலிதா</u> :— ஹே பாபாஜீ! ஸ்ரீ பகவானே பரமானால், அங்கு ஸ்ரீ பகவானின், <u>அம்ஸம்</u> இருக்குமா? இராதா?

<u>வைத்தியம்</u> :— ஸ்ரீ பகவானின் அம்ஸம், என்று <u>நீ எதைக்</u> கூறுகிறாய்?

<u>லலிதா</u> :— ஸ்ரீ பகவானின் அம்ஸம், மாயாவாகும்! பரத்தின் அம்ஸம், ஸ்வயம் ஜோதியாகும்! அந்த ஸ்வயம் ஜோதியில், மாயா நிற்க முடியாதே! ஆகவே நான், கேட்கிறேன்? ஸ்ரீ பகவான் பரமானால், அங்கு அவன் அம்ஸ மாயா உண்டா? இல்லையா? (மாயாவோடு ஸ்ரீ பகவான் இருக்க முடியுமா?)

<u>வைத்தியம்</u> :— அம்மா தெரிந்தே! லலிதா! **பரம்** <u>தான்</u> ஸ்ரீ பகவானாக வர வேண்டும்! வர முடியும். அப்படி வந்த **பின்தான்! மாயாவை!** அவன் பற்ற முடியும். இந்த ஸ்ரீ பகவான்! அந்த பரம்! ஆக வேண்டுமானால், <u>மாயாவை</u> **உதறிவிட்டுத்தான்!** <u>பரமாக முடியும்</u>. மாயாவோடு, இந்த ஸ்ரீ பகவான்! அந்த பரமாக முடியாது என்பது ஸத்தியமே.



லலிதா:- ஹே அன்பான பாபாஜீ! ஸ்ரீபகவானின் தோற்றத்தின் பின்தான், மாயா வந்ததா? ஸ்ரீபகவானுக்கு முன்பே, மாயா இருந்ததா?

மைத்ரியம்:- இது நல்ல விவேகமான கேள்விதான்! ஸ்ரீபகவானுக்கு முன், ஓர் மாயா உண்டு. அதுவே **யோக மாயா** ஆகும். அது பரப்ரம்ம சதாசிவ/மஹேசனின் **நிழல்** ஆகும். அதாவது இதை ஸ்ரீமஹான்கள் சொல்லும்போது; **சாய(ஸ்)ா=மாயா!** எனக்கொள்ளலாம். இதை உபசாரவசனமாக சொல்லும்போது/சாயல் என்றும் **அம்ஸம்** என்றும், பொருள் படும்/அதுவே மாயா என்ற நிலையால், **நிழல்** என்றும் பொருள்படும். அம்ஸம் என்றால், அதன் அம்ஸமாக இருந்து, செயல்படுவதாகும். மாயா என்றால், அதன் **வீர்யசக்தி**யாக இருந்தும், செயல்படும் என்றும் சொல்வர் ஸ்ரீமஹான்கள்.



உயிரினமற்ற (26)

கோடானு கோடி கோள்கள், அண்டங்கள் கோடானு கோடி சூரிய சந்திராதிகள், ஆகிய இவை அனைத்தும் ஜட சொரூபமே யோகமாயாவின் சிருஷ்டி ஆகும். இவை அனைத்தையும் மஹத் சிருஷ்டி எனச் சொல்லலாம் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

தொடரும்.

வைத்தியம்:- ஆறவீ கிளாஸ் ஒன்றே ஆகும்

இங்கு சதாசிவ ஈஸ்வர மஹேசனின் நிழல் யோகமாயா.

சதாசிவ ஈஸ்வர மஹேசனின் மறுவடிவம்

திரிகர்த்தாக்களின் ஸ்ரீயியல்; ஸ்ரீபகவான்

ஆகும். இந்த ஸ்ரீபகவான ஆகிய திரிகர்த்தாக்களின்,

நிழலே யோகமாயா ஆகும். யோகமாயாவின்

மஹத்தின் சிருஷ்டி! மஹத் எனச்

சொல்லும், கோடானு கோடி, அண்டங்களும்! சூரிய


சந்திராதிகளும்! எல்லா கோள்களும் ஆகும். இது

யோகமாயாவின் மஹேசனின் சிருஷ்டி ஆகும்.

ஜகத் எனச் சொல்லும் பூமண்டலங்கள்!

யோகமாயாவின் திரிகர்த்தாக்களின் ஸ்ரீபகவானின்

(லோகம் மேலே காண்க) சிருஷ்டி ஆகும்.



தாவர வர்க்கங்களும், மனித (27)
இனத்தையும் சேர்த்து
நடப்பன, பறப்பன,
நீந்துவன, ஊர்வன,
இருமிசு கிடைகம்,
ஆகிய எல்லா உயி
ரினங்களின் ஜீவ
சரீரங்களின் சிருஷ்டி
லோகமாயாவின் சிருஷ்டியாகும்.

இவை அனைத்தையும் **ஜகத்** (சிருஷ்டி) என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

யோகமாயாவின் சிருஷ்டி **மாயை** ஆகும்.


லோகமாயாவின் சிருஷ்டி **ஜகத்** ஆகும்.

அப்படியானால், லோகமாயாவிலிருந்து, ஸ்ரீபகவான் வரவில்லை என்றும், ஸ்ரீபகவானிலிருந்துதான்!

லோகமாயா வந்தது என்று, உணர்ந்தாலே போதும்!

லலிதா :— ஹே அன்பான மாயாஜீ! ஸ்ரீபகவானின் நிழல் என்றும், வீரிய சக்தி என்றும், லோகமாயாவை கொள்ளும் போது, இந்த **மனம்** தோன்றியது யோகமாயாவிடமா? லோகமாயாவிடமா?

வைக்கியம் :- ஸத்தான கொழுந்தே லலிதா! யோகமாயாவிடம், மனம் தோன்றவில்லை! அப்படி தோன்ற, **காரணகாரியம்** இல்லை என்றே சொல்ல வேண்டும். லோகமாயாவிடம்தான், மனம் தோன்றியது, அதன் காரணம் என்னவென்றால்?



ஞானத் திருஷ்டியில், த்வ த்ருஷ்டி இல்லை.

ஜகத் திருஷ்டியில்தான்! த்வை த்ருஷ்டி வந்தது.

ஆகவே இந்த, மனித ஜீவர்களை! ஆட்டிப்படைக்கவே

மாயாவின், மனம் வந்தது என, கொள்ள வேண்டும்.

லலிதா :— இந்த மனம் இல்லாமல், ஜகத் திருஷ்டி இருக்கவா கூடாதா?

வைத்தியம் :— அம்மா கொழுந்தே! மனம் இல்லாமல், ஜகத் திருஷ்டி, எப்படி இருக்க முடியும்? எப்படி இயங்க முடியும்?


லலிதா :— ஹே பாபா! பாபா! அந்த பரந்தனையே, ஞான அபரிமிதமானசக்தி என்றும், அகண்ட பேரொளி! என்றும் சொல்ல, அது தன் சாமர்த்தியத்தால்! இந்த மனம் இல்லாமல், இக்காரியம் பண்ணவாமே! அவ்வளவு தான் இயங்க விட்டாலும், அது ஸ்ரீபகவான் ஸ்வேஷமாவது பண்ணவாமே? இந்த மனதின் ஆட்டம்! தாங்கமுடியவில்லையமாபா.



இம்மன விளையா (29)
ட்டில், புண்ணிய
பாபங்கள் மோது
கின்றன. அங்கு
தர்மம் சாட்சியாய்
பார்த்துக் கொண்டி
ருக்கிறது. இம்மோத
லில் வெற்றியும் தோ
ல்வியும் மாறிமாறி
வரும். இதைமனம் **இன்பமாக** ரஸிப்
பதால் புண்ணிய பாபத்தால் ஜனனமரணம்
உண்டாகிறது. அம்மனமானது தொடரும்.

வைத்தியம் :— ஹே குருநீ உத்தமமான கொழுந்தே! லலிதா! இது என்ன சிறுபிள்ளைத்தனமான கேள்வி? **மனம்** இல்லையானால், நாமரூப ஜகமேது? அது இருந்து என்ன பிரயோஜனம்? இந்த ஜகம் யாருக்காக இருக்கவே? **மனம்** இல்லையானால், இந்த நாமரூப, ஜக ஜீவ, **விளையாட்டு** எப்படி இருக்கமுடியும்? இயங்க முடியும்? இந்த காரசாரமான, விளையாட்டுக்களை, **மனம்படைத்த** (மனச்சாயலுக்குட்பட்ட) அனைவர்க்கும், ரஸனையாக இருக்கிறது? ஓர் விளையாட்டு **டெனிஸ்** (ஜூவில்) ஒரு அணிதான் மோதுகிறதென்றால் பார்ப்பவர்கள், ரஸிக்க முடியுமா? (வெற்றி தோல்வி என்று)

லலிதா :— ஹே பாபா! நாமே அவ்விளையாட்டில், கலந்திருக்கும் போது, எப்படி ரஸிக்க முடியும்? அங்கு **நாமே**, பாதிக்கப்படுகிறோம்! வெற்றியில் இன்பமும்! தோல்வியில் துன்பமும்! வரும்போது, நாம்தானே மனதால் பாதிக்கப்படுகிறோம்?
மாறி மாறி



தர்மம் என்ற (ஓ0)
சாட்சியின்
அறிவாகிவிட்டால்
புண்ணியமா பாபமோ சிக்கும்.
தர்மம் மேலோ
நீதும் அங்கு ஆனந்
தம் ஒன்றே நிலைபெறும்
இதுவே பரவா நிலைக்கு
வழிவகுத்து கொடுக்கும்.
ஆசை இந்த மனம் இன்பரஸ
வாழ்க்கையே பழக்க வழக்க தோஷத்தால் ஏற்பட
வேண்டும் என்பதே கலிதேவனின் காரியம் ஆகும்.
ஏவலே நான் மனதை ஜயிக்கிறேன். முடிந்தது.

வைத்தியம் :- நீ காண்பவகை இதோ! காட்சிக்கு நீ (விளையாட்டுக்கு) என் நுழைகிறாய்?

லலிதா :- புரியவில்லையே பாபா?

வைத்தியம் :- புரியவில்லையா? இதை உணர்வாயாக.

**நான்/எனது!** தொட்டநிலையால், அங்கு நீ விளையாடுகிறாய். அங்கு வெற்றி தோல்வியும்! உன்னுடைய அகத்தில் இன்பதுன்பமும் உண்டு!

**நான்/எனது!** விட்டநிலையால், அங்கு ஸ்ரீ பகவானின் (உன்னால்! உனது! என்ற நிலையில்) மாயா! உன் **லீலையை** வைத்து விளையாடும். உன்னை அது பாதிக்காது.

லலிதா :- ஹே அன்பான பாபாவே! இதையும் சற்று **உள் ஆழ்ந்து!** உணர்த்துங்கள் பார்ப்போம்!

வைத்தியம் :- பாவா யில்லையே தொடர்ந்தே! மேலும் மேலும்! உள் ஆழ்கிறாயே! அவசியம் உன்னால் முடியும். உள் உள் ஆழ்ந்த கேள்வியே, உன் ஸ்வய அனுபவமாக முடியும் என, ஆசி கூறுகிறேன். இனி கவனிக்கவும்!



ஓர் உண்மை (ஓ!) என்னவென்றால் யோக மாயாவிடம் பேரறிவு ஒளிதான் உண்டு. யோகமாயாவிடம் அறிவு ஒன்று தான் உண்டு. விஷ்ணு மாயாவிடம் மனம் மட்டும் **பலபல**வாய் தோன்றி விளையாடும். அந்த நாடகம்.

பேரறிவு, எந்த இயக்கமும் இல்லாமல் மௌனமாய், சர்வசாட்சியாய் இருக்கும்.


வைத்தியம்:- உன் சங்கல்ப விகல்ப மனமே! அதாவது **குற்றம் குறை** கற்பனையின் மனமே! **மன**

ஜக, ஜீவ, நாமரூப, தோற்றங்களின் விளையாட்டாகும்.

எதை கண்டாலும்! எதை கேட்டாலும்! என்ன நடந்தாலும்! எதை கொடுத்தாலும்! எதை வாங்கினாலும்! எங்கு போனாலும்! எது நம்மை தேடி வந்தாலும்! நாம் தேடி போனாலும்! இது **யார்? எவர்? எதனால்? எப்படி? எதற்கு?** என, எந்த கேள்வியும் கேளாமல்! மனதில் எண்ணாமல்! இது ஸ்ரீபகவானின் கருணையே! நமக்கு நன்மையாக இதை செய்கிறார்!

எதை வணங்கி, பணிவுடன் ஏற்பது **அறிவின்! நிறைவான; திறமையாகும்**

இங்கு நீ விளையாடவில்லை. இங்கு நீ விளையாட்டை ரசிக்கிறாய்!



அறிவு / சாட்சி (௩௨)
யானவ் ஆத்மா
வாகவே இருக்கும்
அதே அறிவு / மாயா
வை புரிந்திருப்பதால் அவித்
ஸ்ரீபகவானின் எனதும்.
மனம்படைத்த மனித
னாகிறது மட்டுமே
சாட்சியாய் அமையும்.
மனமும் விஷ்ணுமாயாவும்
ஒன்றே! இவ்வாறெல்லாம் யோகமாயா விடம்
தோன்றியதே. எப்படி என்றால்? தொடரும்.

லலிதா:— இந்த மனம் வந்த இடமும், விதமும் என்ன?

வைத்தியம்:— இம்மனம், வந்த இடம், யோகமாயாவாகும் இந்தமனம் வந்த விதம், வினையால் வந்ததேயாகும்


**வினையம்!** கொண்டாடவரவில்லை. அதாவது, வினையை தேடவரவில்லை!

லலிதா:— வினையை தேடிய விதம், அஹங்கார மமகார மாகும்! அவ்வளவுதானே? தாங்கள் சொல்லியபடி, விளையாட்டை ரஸித்தால் போதும்! அவ்வளவுதானே? காரசார விளையாட்டு, வேண்டாம்! அவ்வளவுதானே?

வைத்தியம்:— (இடைமறித்து) அவ்வளவுதானே? அவ்வளவுதானே? என விரிவடைகிறதே, காரணம் என்ன?

லலிதா:— ஸ்ரீபகவான் கருணைக்கடல்தானே? அவன் க்ஷமா சாகரம்தானே? அவன் காருண்ய மூர்த்திதானே? அவனே **இதையும்** பார்த்துக் கொள்ளலாமே?

வைத்தியம்:— அவசியம் பார்த்துக் கொள்வான். அப்படியானால், அவன் பார்த்துக்கொள்வான் என்று, நீ **கர்மா** இருக்கலாமே! ஏன் ஐயோ! ஐயோ! ஐயோ! ஐயோ! என்று, மனதை ஏன் குழப்ப வேண்டும்?



**நாமரூப** கற்பனையின் (ஓம்) சிருஷ்டியானது விஷ்ணு மாயாவாகும். அக்கற்பனையின் தோற்ற நிலை அஹங்கார மமகாரத்துடன் பிணைத்து சொந்த பந்த பாச இன்பதுன்பமாம் சுழல் உணர்ச்சிச் சுழலமைமையாகி நித்ய ஜனன மரணத்தை தேடிக் கொள்வது **மனம்** ஆகும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர். தொடரும்.

வஹிதா:— யாரமா குழம்புகிறேன்? அதுவல்லவோ தானே குழம்புகிறது?

வைதேகியம்:— அதுகுழம்ப காரணமாயுள்ளது எது?

வஹிதா:— ஆமாம்! அதுவே மனம்தான்! வேறு எதுவும் இல்லை, என்பதே ஸத்தியம். ஆமாம் பாபா! இக் கேள்வி பதில், விளக்கத்தின்படி பார்த்தால்?

**மாயா**! என சொல்ல கேள்வி! ஆவல் பார்க்கில்?

**நாமரூப**! ஜக ஜீவ, தோற்றங்கள், நேரிலும் காண்கிறோம்! சொல் விளக்கமும் புரிகிறது.

**ஸ்ரீபகவானும்** சொல் விளக்கம்தான்!

மனக்கண்களால், காண முடியாத ஒன்றுதான்!


ஆனால்? **பரம்/பரமனை/சுட்டி**

உணர்த்துகிறீர்களே! அதை கண்டாரும் கிடையாது!

கண்டேன் என சொன்னவரும் கண்டதில்லை. அதை


அதை **உண்டு** என **நம்பிக்கை**

ஒன்றுதான் அது. நம்பிக்கை இல்லையானால் அதுவில்லையாம்.




இதன் சுருக்கம்! (34)
நாம ரூப
தோற்ற கற்பனையே
விஷ்ணுமாயாவாகும்.
இதுவேமனமென்ப திரு
ஷ்டி என சொல்வர்.
அந்த திருஷ்டியில் நான்
எனது என விட்டுவிடுச்சி
யென விசுத்தமயமாகி
ஜனன மரணத்தை தேடுவது
ஆகும். இங்கு ஓர் உண்மை என்ன
வெளியில் தொடரும்.

வனிதா:— இங்கு ஸ்ரீ பகவானுக்கு என்ன குறைவு?
அகங்காரமற்ற, பரந்திருந்து, என்ன பெருமை?
வைத்தியம்:— கொழுந்தே! இக்கேள்விகள் இரண்டையும்
கேட்பது யார்?
வனிதா:— (உள் ஆழ்ந்து உணர்ந்தாள்) எம்மனமே!
வைத்தியம்:— அம்மனம், மோனத்துடன், பற்றி, பற்றி,
பிடிப்பது எதை?
வனிதா:— நாமரூப, ஜக ஜீவ, தோற்றங்களை!
வைத்தியம்:— அத்தோற்றங்கள், எதால் உண்டானது?
வனிதா:— மாயா விநோதமே, அத்தோற்றங்கள்,
உண்டானதாக அறிகிறேன்.
வைத்தியம்:— அம்மாயா! எப்படி உண்டானது?
அது உண்டாக காரணமாக இருந்தது எது?
வனிதா:— மாயா உண்டாக காரணமாக அமைந்தது,
ஸ்ரீ பகவானே! அவனின் நிழலே மாயா!
வைத்தியம்:— அப்பகவானின் தோற்றம், எப்படி
உண்டாயிற்று?
வனிதா:— அப்பகவான் **பரத்தின் மறு வடிவம்!** ஆகும்.




வைத்தியம்:— அப்படியானால் மேலம் எது?
அதன் முடிவு எது?

வஷகா:— மூலம் பரம் / முடிவு நாமரூப, ஜக ஜீவ, ஈஸ்வராதிகள் என்று, ஸ்ரீபகவானுக்கும்.


வைத்தியம்:— அப்படியானால், பரம் முக்கியமா?
ஸ்ரீபகவான் முக்கியமா??

வஷிகா:— (வெகுபலமாக சிரித்துவிட்டார்)
எம் அருமைப்பாபாவே / பரமே / முக்கியம் /

வைத்தியம்:— ஆனால் எம் செல்வமே வஷிகா / நீ
எப்படியோ, முதலில் இருந்து முடிவுக்கு வந்துவிட்டாய்
ஆகவே, முடிவிலிருந்து, முதலுக்கு போவாயாக /
அதாவது ஸ்ரீபகவானை / பற்றிக் கொண்டு
பரம் / நோக்கி செல்வாயாக. ஸ்ரீபகவானை விட்டால்
பரம் சாத்தியமாகாது என்பதே வைத்தியம் / முதலில் பரம்
முடிவில் ஸ்ரீபகவானுக்கும்.

இப்போது உனக்கு முதலில் ஸ்ரீபகவான்
இப்போது உனக்கு முடிவில் பரமாகும்.

தஜ பாபா.



ஸ்ரீ தேகண்டவிநா சித்தத்தின் படி:- யோகமாயாக்கு யோகமாயாவின் சிருஷ்டியை:- மண்மய சிருஷ்டி மனோ சன் சிருஷ்டி என்றும்; விஷ்ணுமாயாவின் சிருஷ்டியும் மனதின் சிருஷ்டியையும் சேர்த்து மனோமய சிருஷ்டி ஜீவ சிருஷ்டி என்றும் ஸ்ரீமஹான்கள் கூறுவர்

(36)

# சிருஷ்டியின் விபரம்!

(1) யோகமாயாவின் சிருஷ்டி:- அனந்த கோடானு கோடி கோள்கள், (கோடானுகோடி) சூரிய சந்திராதிகள், அனந்த ஒட்டு மொத்த சிருஷ்டியாகும்.

(2) யோகமாயாவின் சிருஷ்டி:- தாவரவர்க்கங்கள், மனித இனத்தையும் சேர்த்து, நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன, மற்றும் எல்லா ஜீவ கோடிகளின், சரீராதிகளின் சிருஷ்டியாகும்.

(3) விஷ்ணுமாயாவின் சிருஷ்டி:- மனித மனங்களின் வினையின், தேவைகளையும் & ஆசைகளையும், அனுசரித்து செய்யும் மனோமய சிருஷ்டியாகும்.

(4) மாயா மனதின் சிருஷ்டி:- விஷ்ணுமாயாவின் சிருஷ்டியை, உடைமை & உரிமை என கொண்டாடி, அத் தோற்ற மயக்கத்தால், சொந்தமும், பந்தமும், பாசமும், பற்றும், தமக்குத்தாமே ஏற்படுத்திக் கொண்டு, வினை உடல் சிருஷ்டிப்பதாகும். — [illegible]



# யோகிகள் ஸித்தர்கள் இவர்களுடன்!

## யோக ஸித்தர்களின் வரலாறு

## ஓர் ஸந்தான உரையாடல்!


அன்பான ஆத்மானந்த குழந்தைகளே!

தற்சமயம்! மீஸ யாத்திரை! போய் வந்த பிறகு. அனேக ஸ்ரீமஹான்கள்! தூல உடலுடனும்! சூட்சும உடலுடனும் வந்து போகின்றனர். அவர்கள் கேள்வி எல்லாம். பொறுமை! பணிவு! கனிவு! இனிமை! எளிமை! **அன்பு & அறிவு!** இவைகளின் ஜீவம், பொறுமையாய்? எப்படி விட்டுக்கொடுப்பது? எப்படி சகித்துக்கொள்வது? எதையும் எப்படி, ஏற்றுக் கொள்வது? மூழ்வில் நவம் என, **பேச்சை** (வார்த்தை) எப்படி குறைப்பது?

போன்ற விளக்கங்கள், கேட்டு ஆனந்தம் அடைந்தனர். அதன் விளக்கத்தை, கேள்வி பதிலுடன் தருகிறேன். உணர்வால் உணரவும்! **யோக** ஸித்தியுறுப்!

(A) தூல உடல்:- ஒருவன் **யோக ஸித்தபுருஷன்** ஆகிறான் என, ஸ்ரீ மஹான்கள், வாயிலாக அறிகிறோம். அப்படி ஸித்த புருஷன் ஆனவனிடம், தற்காலமாக (கலியுகத்தில்)





உடம்பினில் கொழுப்பு இருப்பதில்லை. எலும்பினுள் மட்டும் கொழுப்பு உண்டு. அதுவே அவர்களின் ஜீவிய காலம்.

எலும்பும் (38) நரம்பும்தான்! உண்டே தவிர, (கொழுப்பும் உண்டு அது மிகை பலம்) மாம்ஸமும் (சதைப் பற்றும்) இருக்காது. இல்லாத வரி காரணம். மனம் இருக்கிறதும்! வாயுவின் அழுத்தத்தினால் ஜடம் கரிக் கட்டையைப் போல இருக்கும்.

அஷ்ட (எட்டு வித ஸித்திகள் உண்டு. அவைகளை சொல்லி, உங்கள் மனதை எழுச்சிப் பண்ண இந்நூல் விரும்பவில்லை. ஆகவே மன்னிக்கவும்)

ஸித்திகளும் இருப்பதில்லை. இருக்க இயலவில்லை. அந்த அளவுக்கு, பயிற்சி இல்லை. சுமார் நான்கு/ ஐந்திற்கு மேல் அவர்களிடம் ஸித்தியில்லை.

இவர்களிடம் அவை பூரணமாக இருக்கிறது.

இவர்களிடம் அரைகுறையாக இருக்கிறது.

இவர்களில் அனேகர், 300 வயதுக்கு மேல்/ 2000 வயதுடையவர்களாக இருக்கிறார்கள். இவர்களின் தாவமானது, சுவாச பந்தன கும்ப பயிற்சியும் & காயகல்பம் (என்ற வஜ்ரமென உடல் இருகப்பண்ணுவதும்/ அழியாமல் இருக்கப்பண்ணுவதும்/ வயதை காட்டா தன்மையும்/ அளவுது வாலிப வயது இளமையும்/ காயகல்பமும் (முற்ற உடல் தோற்றத்துடனும்) இருக்கச்செய்வது/ செய்யும் ஓர்




கேள் குழந்தாய் பெரியோர்கள் சொல் மறவேல்.
ஸ்ரீ அழகன் வாக்கு.

குருதி இல்லாத தன்மையால் 39 இவர்கள் சொந்த பந்த பாச உறவு களை ஒதுக்க முடியாது, ஒதுக்க இயலாது. ஆகவே இவர்கள் அன்பின் நேர் எதிரிடையான

அகங்காரம், ஆதிக்கம், அஹங்காரம்! விட முடியாமல் இருக்கின்றார்கள்.

மூலிகை (ஐந்து விதம் உண்டு) இவைமை, உண்டு, மதை வலிமையானதும், வாயுவின், ஆற்றல், சூட்சுமத்தாலும்; தூல உடல் தாங்குகின்றனர். இதுவே தூல உடல் ஆகும். என்ன வென்றால்? மேலும் இவ் மற்றோர், முக்கியம் வாயுவின் அழுத்த சக்தியால், இவர்கள் குருதி (இரத்தம்) வறண்டு, உலர்ந்து, காய்ந்து, இல்லாமலே, போய் விடுகிறது. ஆனால், அவர்கள், எலும்பு, வஜ்ரம் என ஆகி விடுகிறது. இவர்களின் உடலில் உள்ள மூளையை விட, இவர்களின், எலும்பில், உள்ள சக்தி வாய்ந்த, கொழுப்பு அதிக ஆற்றல் உள்ளதாக இருக்கிறது என, அந்த ஸ்ரீ மஹாத்மாக்களே, சொல்லக் கேள்வி.



இந்த யோகிகளும், ஸித்தர்களும், பெரும்பாலும், ஹிமாலயாவில்தான், இருக்கிறார்கள். வேறு எங்கும், இவர்கள் இருக்க முடியாது. இருக்க இயலாது. காரணம் கலி தோஷ கோரங்கள் ஆகும். (40)

இவர்களிடம் :— ஒரு மாறுதல் / பறத்தல் / மறைதல் / மறைத்தல் / அக்கினி, ஜலம், இவைகளில் வசிக்கவும், சஞ்சாரம் செய்யவும், முடியும் / தேவைகளானாலே, இருந்த இடத்தில் தோன்றவும் ஆகாயவழி உண்டு.

(B) சூட்சம உடல் :— இது இவர்கள் சாதனையின்

**சக்தியின்** (ஸித்திகளின் சக்தியால்!)

தூலம் இருந்தாலும் **மணக்கண்கள்!**

உள்ளவர்களுக்கு தோன்றுவதில்லை. ஒருசவர்

இயல்பாகவே மறையலாம். அருவ ஓசைமட்டும் கேட்கலாம்.

அவர்களிடம் மனம் இருப்பதால், மனம் உவந்து

இவருக்கு, தரிசனம் காட்டவும் முடியும்!

குருதி வற்றி, இல்லாமல் போகும்போது, இவர்கள்

ஏற்று வந்த, **பிராரப்தம்!** முடிவுறும்!

**சஞ்சிதகர்மா!** இவர்களுக்காக காத்திருக்கும்.

இவர்கள் அடாவடியாக! ஏதேனும் ஓர் காரியம் செய்யும் போது

அது இவர்களுக்கு, **ஆகாமியமாக**

மறு ஜன்மாவுக்காக, சேர்ந்து கொண்டே வரும்.


எப்படியும் ஓர் காலம்! ஓர் நிலையில்! **மனித**

உடல்! எடுத்தே ஆக வேண்டும். இதுவே இவர்களின் சூட்சம உடல் ஆகும்! ஞானஅவர்கள்,

வாயிலாக அறிந்தேன்.

(41)





இவர்களிடம் மாயாமனம் அடங்கியும், அபார ஆற்றலுடனும், இரும்பாகவே, ஒருவர் சக்தியை ருசிகர் எதிர்ப்பதிலும்! அழிப்பதிலும்! ஒருவருக்கொருவர் போட்டி பொறாமை கொண்டவர்களாயும் உள்ளனர். காமம் நான் எனும் ஆணவம் என்ற அகங்கார அதிகார ஆதிக்க மோகம் ஆகியவை அவர்களால் அதிகரிக்கும்.

மூலிகைகளின் சக்தி சரீரத்தை வஜ்ரம் என ஆக்கி விடுகிறது.

வாயுவின் பந்தனம் கட்டுதல்! தாபத்தின் சஞ்சாரம் அதிதாரித! அதிவலிமை! அசுர சக்தியை! கொடுக்கிறது.


இவர்களின் மனதை அடக்கும் (அழிந்து! மனதுக்கு அறிவு) ஸித்திகளுக்கே! அபார சிருஷ்டிக்கும்! அஷ்ட

இவர்களின் மனதை அடக்கும் என்பது வாயுவின் மேல் கவனம் வைத்து அதை அடக்குவதாகும்

உபகாரமாக இருக்கிறது.

நான் & என்னுடைய என்ற, அஹங்காரமும்! அதிகார, ஆதிக்க மும்! வினை பெருக்கத்திற்கு, ஏதுவாகிறது.

இவர்கள் யோகபலமானது! பாம்பின் விஷம், எப்படி நாத ரத்தினமாகமாறுகிறதோ! அதே நியதியில், காலப் போக்கில், அஷ்ட ஸித்திகளாக! மாறிவிடுகிறது.



இந்த ஸித்த புருஷர் (42)
களின், உலகத்தை
யோகமாயா தம் வசம்
வைத்திருக்கிறதென்றால்
இவர் அதை யோகமாயா
விற்கிடமான, **மணி**
**த்வீபம்** என சொல்
கிறார்கள். இது மேலிடமு

ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டதால், அது
உலகங்களாயும், ஒன்றென சொல்லுகிறார்கள். அவ்வாறாக
வேறு உலகம் என்றும் சொல்லுகிறார்கள், அவ்வுலகம் நமக்கு தேவையில்லை.
இருந்தாலும்,

அஷ்டஸித்திகளும் **பூர்த்தியானவ்**

இவர்கள், இப்பூவுலகில் இருக்க முடியாது. இருக்க இயலாது. இவர்களுக்கென்றே, ஓர் உலகத்தை யோகமாயா, தன் வசம் வைத்திருக்கிறது.


அதுவே:- (வடவால விருக்ஷத்தின்)

**வடக்குப் பகுதி** என்று மஹான்கள் சொல்வர். (இது மனதால் கற்பனை பண்ண முடியாத ஒன்றுமே)

இந்த இடத்திற்கு:- திரிகர்த்தாக்களும் போனது இல்லை. போக தேவையில்லை.

ஞானிகளும் அங்கு போனதில்லை.
" அங்கு அவர்களுக்கு வேலை இல்லை.
" **யோகமாயா** மட்டும்
அதன் அதிபதியென, பேசப்படுகிறது.
" இதை பிரம்மசிருஷ்டிக்கும், அப்பால் உள்ளதென சொல்வார்கள்.

இந்த இடத்தின், பிரதான ஸித்தர் **காகபுஜண்டி யோகி** எனச் சொல்வதுண்டு.





வந்து போகும்
ஸித்தர்கள்
எண்ணில்:—

(43)

ஓர் ஞானியின் உதவி
யால் ஆலோகம் வந்து
ஜனனம் எடுப்பவரும்
அஷ்ட ஸித்திகளும்
பெற்று அந்த வடவால
ஹிருதயம் செய்பவரும்
கணக்கு வரவும் செலவும்
சரியாக இருக்கும் எனவும்
(வருவதும் போவதும்) அது யோகமாயாவின் கணிப்பு எனவும் உணரவும்
அக்கணக்கு நமக்கு தேவையில்லை

இந்த காகபுஜண்ட யோகி! பலபல! பலபல! பலபல!
(கணக்கில் அடங்கா) **கல்பகோடி** காலம்!
வசித்து வருவதாக, ஸ்ரீகுருநாதர்கள் வாயிலாக அறிகிறோம்.
இவருடன் **வந்து போகும்!** நூலியால் ஸித்தர்கள்
**நவகோடி!** (ஒன்பது கோடி) உண்டெனச், சொல்லக் கேள்வி.

இக்கணக்கு, எப்போது ஆரம்பம் என்பதையும் அறியோம்.
,, எப்போது முடியும் ,, ,, .
,, கூடுவதும் இல்லை குறைவதும் இல்லை என,
ஸ்ரீகுருநாதர்கள் சொல்லக் கேள்விப்படுகிறோம். நட
இவர்களுக்கும், ஓர் நற்கதி வேண்டும் என்று, எவரோ ஓர் ஞானி!
யோகமாயாவின் துணையுடன், போக வேண்டியதில்லை, ஏதுமில்லை
என்றும்; அந்த ஞானியிடம், விதி வசத்தவர்கள், ஏதோ ஓர் அபராதம்
பண்ணி, அதன் பலனை ஏதோ ஓர் ஆலோகத்தில், ஓர் அன்னியன்!
கருவுக்குள் புகுந்து, ஓர் ஜனனம் எடுத்து, (இவருக்கு ஸத்குரு
கிருபாசமஸ்யம் உண்டு) ஓர் ஸத்குருவின் மூலமாக அவ்வித ஞானத்தை
பெற்று, ஜீவன் முக்தி அடைவார்கள் என்று, பிரம்மரகஸ்யம்!
கூறுவதாக, ஸ்ரீகுருநாதர்கள் வாயிலாக அறிகிறோம்.



இதில் வரும் வாசகங்களில் (47) பெரும்பாலும் எல்லோருமே என்றில்! நான் என்றவார் தன்மையை அழித்தி சொல்வார்கள். ஆனால் உங்கள் மனமேப ஒதுங்கட்டும் விடலாகாது என, எல்லாவற்றையும் எம்மால் நாமே! நாமே! என கொள்கிறோம்.

யோக ஸித்தர்களின், **வரலாறு** பார்த்தோம்.

இனி அவர்களுடன், **உரையாடிய**

ஆழ்ந்த கருத்தினை உணர்வீர்.

**(1)** ஓர்நாள் **2** யோகிகளின் உரையாடல்!


ஓர் ஸ்ரீமஹாத்மா! பிரணாம் ஜீபாபா என்றார்!

,, நமஸ்காரம் ஜீ என்றார்!

,, திருவடி பணிகிறேன், பாபா ஜீ என்றார்!


வைத்தியம் :- ஓ மஹாத்மாஜி! அவ்விருவரும் கூறியது, **வணக்கத்திற்கு!** உரியதாயிருந்தது. தாங்கள் கூறியது, **பணிவின்** இருப்பிடமாக இருக்கிறதே? காரணம் என்ன?

அவர் சொன்னார் :- ஓ எம் பணிவான பாபாஜி! யாம் இந்த ஹிமாலயாவுக்கு வந்து, சுமார் **1000** வருடங்கள் ஆகிவிட்டன. நதை தொன்றையும் தாங்களுக்கு பிடிக்காது! அதைமுறையும் தாங்களுக்கும் பிடிக்காதென்பதை தற்காலம், கங்கோத்ரி! கேதாரம்! பத்ரி! ஆகிய இடங்களில், நடந்த ஸத்ஸங்கங்களின்போதாக, உணர்ந்தோம். மேலும் இதே, ஹரித்துவார் ரிஷிகேஷ்! ஆகிய இடங்களில்,



வெளி உலகுக்கு தன்னை காட்டிக்காத, ஸ்ரீ மஹான்கள், ஓர் **ஆறு**! பேர்தான் உண்டு. அவர்களும் சுமார் **500** வருடங்களுக்கு, முந்தியவர்களே. அவர்கள் **யோகா** பயிற்சி பண்ணி, **ஞான** விசாரணையோடு, கூடியிருக்கிறார்கள். அவர்கள் அறுவரும், நாங்களுக்கு, **அறிமுகம்** ஆனவர்களே!

மாதம் இருமுறையாவது, அவர்கள் அறுவரும், ஓரிடத்தில் கூடி, நாங்கள் நினைத்தால், அச்சமயமே! அவர்கள் முன் வந்து, அவர்களோடு, ஓர் ஸத்ஸங்க, உரையாடல் செய்துவிட்டு, உடனே சென்று விடுவோர்களாம். அவர்கள்தான், நாங்கள் இங்கு வரும், வியூகத்தை சொன்னார்கள். அவர்கள் எமக்கு சொன்னது ஒன்றுதான்:- பணிவு என்றால் பாபா! பாபா என்றால் பணிவு! இப் பணிவு **பொறுமை**! ஒன்றுமே முக்கியமானவை. வேறு எந்த சாதனையும் தேவையில்லை. அதுவே எங்கள் **முடிந்த போதனை** ஆகும். **சாதனை**யும் ஆகும். என சொல்வார்கள்.




(46)

இதில் கூறிய படி
காணும் போது
தூலக் கணக்கின் படி
குருவின் வயது 500
சிஷ்யனின் வயது 1000
ஆக தோற்றுகிறது.
உடல் முக்கியமல்ல.
உண்மையின் உணர்வே
முக்கியமானது. இது ஸத்தியம்
உடல் நாமரூப ஆகத்தோற்றமுடையது. அது அஸத்தியம்
உண்மையின் உணர்வு ஆன்மாவானது. அது ஸத்தியம்.

அவர்களில், ஒருவரையே **யாம் குரு**வாக ஏற்றிருக்கிறோம். அவர்களின் தத்துவ உபதேசத்தால், **பாறை** போன்று இருந்த எம் **மனம் மிருது** ஆக ஆரம்பித்து விட்டது. இனி காலக் கிரமத்தில் எம் மனம் **பஞ்சு** போன்றதாகிவிடும். வைத்தியத்தின் பயனாம் கலியுகதர்மம். இவ்வாறிருக்க, போக உங்கள் **மடல்**கள் **பல** ஐயம் வெகு சந்தோஷமாக வைத்து,

நாம் **ஸ்வயஞானானுபவம்** பெற்று, **நம்பிக்கை** உள்ள அன்பர்களுக்கு **மட்டும்** ஸ்வயஞானானுபவ ரகஸ்யத்தை இவைகளை சிரவண **மனனம்** செய்யச் சொல்லியும், வருகின்றோம். அவர்களிடம் பாடம் கேட்பவர்கள் அமார் ஐந்து, ஆறு பேர்கள் உண்டு.



சித்தர்களின் (47)
நீண்ட ஆயுளுக்கு
காரணம். — அவர்களுடைய
சுவாச பந்தனமே (கட்டுப்
பாடே) காரணம் ஆகும்.
ஒருவனுடைய ஆயுள் அவ
னுடைய மூச்சுக் காற்றின்
எண்ணிக்கையை வைத்தே
திரளையிக் கம்பரவகால் இவர்கள் சுவாசக் காற்றை
நிறுத்தி விடுகிறார்கள் சுவாசம் நின்ற தன்மையினால்
இவர்களின் இருப்பாகிய விதி முடிவதில்லை.

இவர் சொன்னவைகளை, கவனமாக கேட்டு வந்த,
இருவரில் ஒருவர் :— ஆமாம் பாபா ஜீ! தாங்கள்
உறைவிடமோ, பாரத பூமியின் தென் பகுதி!

ஹரித்துவார் ரிஷிகேஷ்! வடபகுதி!!

இவ்விரண்டுக்கும் இடையே, பல ஆயிரம் மைல்கள்.
தாங்களுக்கு, யோக பலமும்! சித்திகளின் வன்மையும்!
இல்லையென்பது, அனைவரும் அறிந்த, உண்மை. தாங்கள்
இங்கு வந்து போவது என்றால்?

ஏது உங்களுக்கு துணை புரிகிறது?

வைத்தியம் :— ஓ எம் மகாத்மா ஜீ! உங்கள் யோகத்
தின், சித்திகள், எவ்வாறு உங்களுக்கு கூடுகிறது?

ஸ்ரீ யோகி :— எம்முடைய (என்னுடைய)
வாயு பந்தன, யோக சாதனையின் பலத்தால்.

வைத்தியம் :— எமக்கு, எம் ஸ்ரீ பகவான் கருணையினால்!
ஸ்ரீ யோகி :— ஸ்ரீ பகவான் என்பது, ஓர் மாயா!
காரியம் தானே?
வைத்தியம் :— உங்கள் சக்தி வெறும் காற்றும்
இல்லாத மாயம் தானே?



மேலும் சுவாச பந்தமே, அவர்கள் (48) குருவை வந்தனம் செய்து இல்லாமல் செய்பவர்கள் உலர்ந்த கட்டையைப் போல் ஆகிவிடுகிறார்கள். அவர்களின் மனம் உள்ளே செயலற்று அடங்கிவிடுவது மூச்சின் கணக்கு முடியாததினாலும், தாவம் கட்டையாக மாறிவிட்டதினாலும் இவர்கள் ஆயுள் பலபல ஆயிரம் ஆண்டுகள் தாவம் அழியாமல் இருக்க முடியும் முடிந்தது.


ஸ்ரீ யோகி:— காற்று என்று அலட்சியமாக சொல்லி விட்டீரே, விபரம் அறியாமல். உங்கள், ஸ்ரீ பகவான் ஜோதி என்ற அக்கினி எம் சக்தியை கொடுக்கும் வாயு/அக்கினியாயும், தானே? அதீதமான தென்று உமக்கு தெரியாதா?

வைத்தியம்:— பஞ்ச பூதங்களில், அக்கினியை விட வாயு அதீதமானது தான். யாம் ஒப்புக் கொள்கிறேம். ஆகணிலும் அதீதம் ஒன்றுண்டு என்பதை மறந்து விட்டீர்களா? யோகீஸ்வரரே?

ஸ்ரீ யோகி:— வாயுவினும், அதீதமானது, எதுவும் இருப்பதாக, தெரியவில்லையே பாபா? ஆனால் ஆகாயம் உண்டு. அது செயலற்ற வெட்டவெளி தானே?

வைத்தியம்:— ஐயா யோகபுருஷரே! உங்கள் அன்பர் குதம்பைச் சித்தர் பாடல் தெரியாதா?

ஸ்ரீ யோகி:— ஆமாம் பாபா! அந்த குதம்பைச் சித்தர் இக்குழியில் தோன்றியவரே! அறிவு அவர் எம் இனத்தவரே!



குறும்பைச் சித்தரின் பாடல் விளக்கம்:— (49)

யோக & லோக மாயாவின் அம்ச ஆகாயத்தை அதாவது இறைவியையும்! இறைவன் அம்ச சக்தியையும்

அவன் **கருணையினால்** தொடரும்.

ஸ்ரீ யோகி:— அவர் என்னவாகி யிருக்கிறார்?

வைத்தியம்:— **வெட்டவெளி** (தன்றே)!

**மெய்** என்று இருப்போர்க்கு,
**பட்டயம்** ஏதுக்கடி? மெய்யாய்ப்பட்டயம் ஏதுக்கடி? என்றார்

ஸ்ரீ யோகி:— ஆமாம்! எனக்கும் ஞாபகம் வருகிறது.
அதன் பொருள் என்னசொல்லப்பா?

வைத்தியம்:— வெட்டவெளி என்பது ஆகாயமாகும்.
அதுவே முதலில் யோகமாயாவாகவும்! பின் அதுவே, (ஆகாய அம்சமே) லோகமாயாவாகவும்! வழி வகுக்கிறது என, உணர வேண்டும் இந்த **மாயா** என்பது ஸ்ரீ பகவானின் திரிகர்த்தாக்களின் **நிழல்** ஆகும்.

ஆகவே தான், ஸ்ரீ பகவான் **மாயா** ஆகமாட்டான்.
அம்மாயாவை, தன்னுள் **அடக்கியவன்**!

ஸ்ரீ பகவானும். இப்போது சொல்லுங்கள் பார்ப்போம்?
வாயுவை விட, ஆகாயம் அபார ஆற்றல் உள்ளதாகும்.



(50)


பெற்ற நிலையில் அவனை நாமாய்! நாமே அவனாய்! ஆனவர்களுக்கு, பட்டயம் என்பது சாஸ்திர! வேத! வேதாந்த! எந்த பட்டமும்! பதவியும்! தேவை இல்லை என்பதே பொருளாகும். எந்த சமயமும் சமயமின்மையும் தேவையில்லை. அவை வெளி மயக்கமே! முடிந்தது,

பைத்தியம்:— **மாயாவை** உடைய ஸ்ரீபகவானை! உங்களிலும் இருந்தவன். ஆகவே, அப்பகவானின், கருணையை ஆதாரமாக பெற்ற யாம், இந்த உலகம் விட்டு வேறு எந்த உலகமானாலும், எமதையன், **கண்ணன்** (கிருஷ்ணன்) கருணையால் **ஒரு நொடியில்** போய் வர முடியும்.

மற்றோர் யோகி:— ஓஹோ பாபாஜி! அப்படி நீர், சென்று வருவது, மாயாஜாலமா? ஞான மார்க்கமா?


பைத்தியம்:— ஓம் அன்பான ஞானக்காதலே! கதை உரையும்:— மாயாஜாலம், ஸ்ரீ பகவானுக்கு அவசியம் வேண்டும். தாங்களும் போன்ற, யோக ஸித்தர்களுக்கு யோக **பலமான** மனோ ஸித்தியின், நிலையால் மயக்கமும். எமக்கு இந்த இரண்டும் இல்லை. இவ்விரண்டுமே தேவையில்லை.

ஸ்ரீ யோகி:— இவ்விரண்டும் தான் தொழில் தரப்பயனாகின்றது, எதுவும் மார்க்கங்கள். இவ்விரண்டும், இல்லாமல், உம்மால் எப்படி போக முடியும்? உம் வாக்கோ, ஸ்ரீ பகவான் என்று கண்ணன்! எம் வசம் என்கிறீர். அவனே **ஓர்** பிள்ளை **விளையாட்டு** விளையாடும்;



ஸ்ரீயோகி:—
மாயா ஜாலக்காரன்! என்று சொல்லக் கேள்விப்பட்டி
ருக்கிறோம். அவனுடைய மாயாவும் இல்லையென்றால்,
போய் வருவது எப்படி?
வைத்தியர்:— எமதையன் திருடன்! என்றும் கண்ணன்!
கருணையுறும் மாயம் இல்லாமல் ஜாலமாக
விளையாட்டாக்கமாக சென்று வரமுடியும்.


ஸ்ரீயோகி:— புரியவில்லையேமாமா! விளையாட்டு
என்றால் அது என்ன விளையாட்டு?
வைத்தியர்:— ஹே மஹா மஹாத்மாக்களே! இவ்விளையா
ட்டு என்பது, இக் கலி யுகத்திற்கென்றே! எமதைய
ன், கண்ணனின் பரப்பிரசாதம்! என்றே,
உபசார
வாக்கிய விளக்கத்திற்காக, சொல்லலாம். ஆனால் இது
வரம் அல்ல. இது மாயாவை உடைய
ஸ்ரீபகவானும்! பரா அம்சமான ஓர் அங்கமும்
இணைந்து, நடத்தும், ஓர் விளையாட்டாகும். இவ்விளை
யாட்டில், எந்த வினையும் வினையின் பாதிப்பும்



ஏங்கித்தவிக்கும் (62)
பக்குவ ஆன்மா
வானது:- நாம ரூப
தோற்ற தோடு ஒன்றி
விட்டவராகவும்! விட்டு
பிரிந்த அறிவு சொரூபமாகவும்
இருக்க வேண்டும். மனதின்
கற்பனையான தோற்றங்கள்
அனுபவமானாலும் இருந்தாலும்
எம்மை உள்ளபடி காண முடியாது
எம்மை அடைக்கவும் முடியாது. அப்படி அடைக்காவிட்டால்
அவர் எம் இருப்பை உணரவும் முடியாது. தோடவும்
இருக்க முடியாது. இருக்க இயலாது. இது பரமரகசியமாகும்.

ஸ்ரீயோகி:- பணிவின் சொரூபமான எம் பாபாவே!
பரமரகசியார்த்தம் அனைத்தும், ஒருவரான பாபாஜீ!
நீ சொல்வது இது வரையில், எவரும் கேள்விப்படாத ஒன்றுமே.
சற்று தோயட்டு காட்டுங்கள், யாம் புரிந்து கொள்வோம்.


வைத்தியம்:- அது வாக இருந்து இதை வெளியிடுவேன்.
பர சொரூப அம்சம் கொண்ட, ஓர் திடஞானிக்கு
மட்டும், பர ஒலியை கேட்கும், இவன்
ஆற்றல், பர கருணையால் பெற முடியும். நாம ரூப, ஜக ஜீவ,
அனைத்து தோற்றங்களையும் தாமாக உணரும்
நிலை பெற்றதன்மையால், (இது சர்வ சாட்சி நிலையாகும்)
ஏங்கித்தவிக்கும் பக்குவ ஆன்மாக்கள்,
இவ்வுலகில், எங்கிருந்தாலும் அவர்கள் அறிவு
பூர்வமாக ஞானவேட்கையில்
ஹண்ணம் பம் (உயர்நிலையில்) செய்வார்கள்.



ஆதலால் இருப்போம். (53)
உடல் உலக
உணர்ச்சிகள்
உள்ளவரை அறிவு
பிரகாசிக்காது. அறிவு
பிரகாசிக்காவிட்டால்
எம்மை உள்ளபடி
உணர முடியும். உங்கள்
மனமே எம்மை மறைக்கிறது
ஓர் திரையாக! உங்கள்
மனத்திரை அகன்றால் தான்
கடவுள் எம்மை உள்ளபடி உணர முடியும். அந்த
விடையே யாமும் நீயும் ஒன்றெனவும் உணர முடியும்.
முடிந்தது.

அது அந்த **விடையே!** அது சமயந்தோறும் கொண்டவருக்கு, **சங்கேத** (உணர்வு பூர்வமான) பாஷையில், இவர் கிரஹிக்க முடியும். அந்த விடையே, ஸ்ரீகண்ணன்! அவரே பிரத்யக்ஷமானவர்.

யாமும், அவனும், **ஒன்றான** தன்மையறவே, என்ன செய்ய வேண்டும் என்பதை உடனே உணர முடியும், எம் மெய்யன்பர்களிடம், சற்று வெளியே போக வேண்டும் என்ற, வார்த்தையை, மட்டும், கூறி விட்டு, ஓர் தூய **வெண்மை!** வஸ்திரம் கொண்டு, உடலை முழுமையாக மூடிப்படுத்து விடுவோம் இதன் ரகசியம்? தூலம் இங்கு இருக்கும் **பாவனையாக** தோற்றம் பார்த்தாலும், தீண்டினாலும் தூலம் தோற்றமும் ஆதலால் இராது. ஆனால் **யாம்** செல்லும் இடத்திற்கு, சென்று வந்து விடுவோம். இது மாயாவும் அல்ல — வித்தையும் அல்ல. மந்திரமும் அல்ல. சித்துக்களும் அல்ல. ஆனால் முடியும்.



பிரம்மன்! சிவன்! (54)
நாராயணன்!
விநாயகன்! முருகன்!
இந்த ஐவரும் **ஞான**
அம்சமாகும்.
இனி முக்கியம் என்ன
வென்றால்:- **தோஷ**
குணங்கள் அழிந்து
நாசமாறவதற்கு ஞானம் அவசியமாகும். தோஷ
குணம்! மனம்! இருக்கும்வரை ஞானம் பிரகாசிக்காது
என்பது சத்தியமே!

ஓர் முக்கிய உணர்வு! முன்பே சொன்னோம்.

(A) பிரம்மன்! நாராயணன்! சிவபெருமான்! இம் மூவருக்கும் இருப்பு மட்டும் உண்டு! தோற்றம்! மறைவு! இல்லை!

(B) விநாயகன்! முருகன்! இவ்விருவருக்கும், தோற்றம்! இருப்பு மட்டும் உண்டு! மறைவு! இல்லை!

(C) ராமன்! கிருஷ்ணன் (கண்ணன்) இவ்விருவருக்கும், தோற்றம்! இருப்பு! மறைவு! ஆகிய இம் மூன்றும், உண்டு.

(D) மேலே கூறிய ஐவரும் (பிரம்மன்! நாராயணன்! சிவபெருமான்! விநாயகன்! முருகன்) **ஸத்** அம்சம் கொண்டவர்கள், என உணர வேண்டும்.

(E) மேலே கூறிய இருவரில், ராமன் மட்டும் **ஸித்** அம்சம் கொண்டவன். இவன் **ஸத்திய, தர்மத்தை**
**ரு** கூடியவனும்
**ஏருவனோ!**

(F) முடிவில் சொல்லும், கிருஷ்ணன் என்னும் கண்ணன்!
**கலியுக தோஷ குண**ங்களின்!
**நிவர்த்திக்காகவே** வந்தவனும்.

இங்கு எந்த, முக்திக்கும் அவேஷமும் இல்லை, என்பதே ஸத்தியம்!



பர வாக்கிய விளக்கத் திறக்காது! இதை கருணை எனச் சொல்லலாம்!

(55)

இந்த கிருஷ்ணரோ! அந்த ராமரோ! அந்த இவரோ!

ஒருவனே

யாருடையவர் இல்லை. இருவரும் இல்லை. உங்கள் குணநிவர்த்திக்காகவே இவ்வாறு வரிசைக்கிரமமாக சொன் தேடு யாரும் ஒத்தி


பேதங்கள் அவ்வளவு ஏற்படுத்த ஸத்தியம். தொன்று வரும் தன்றுவரும் உங்கள் அறிவின் திறனும்.

நீங்கள்! அவன் அருளால், சொல்லப்பட்டது இது ஸத்தியம்

அந்த கிருஷ்ணன்! என்ற கண்ணன்! ஒருவனைக் கலியில், தோஷநிவர்த்திக்காக, அவதாரத்துடன், வரவேண்டும்! வந்தே ஆக வேண்டும்! வந்தே தீர வேண்டும்! வந்தே தீர வேண்டும்:– நம்பிக்கையாள், காரண காரியம், இவன் ஒருவனே அறிவான். அதைத் தீர்ப்பவனும், இவன் ஒருவனே! முன் சொன்ன ஐவகை ஞானத்திற்கு அதிபதியானவன்.

வஞ்சகம்! கூச்சல், பொய்! கபடம்! இவையே, கலி தோஷம் ஆகும். இவற்றின், மொத்த உருவமே கண்ணனும்.

அதாவது, முள்ளை, முள்ளால்! எடுப்பதுபோல், தோஷ குணங்களை அந்தந்த தோஷ குணங்களாலேயே அழிக்க வந்தவன் கண்ணனும். கண்ணன் தன்னை சாமான்ய குரு என சொல்வான். இவை அனைத்தும் ரகஸியமானவை.




56

(வார்த்தை)
ஆனால் அன்பர்களிடம், ஒன்று மட்டும், சொல்லிவிடப் போம்.
**அவசரம்!** நம்மை காக்க வேண்டிய குருநாதர்
உருவானாலும், அங்கத்தில் **வேறு எங்கும்**
தொடாதே! அது **ஆபத்தாகும்!** இரு
பாதங்களில், தேகம் ஒரு பாகத்தில், **அடியை**
லேசாக வருடினால் போதும். சில விநாடிகளில்!
(நிமிஷமல்ல) வந்து விடுவோம் என்போம். இதுவரை,
இதை ரகசியமாகவே, வைத்திருக்கிறோம்.

ஸ்ரீ யோகி :— ஓ அருமையிலும், எளிமையான யாகம்!
(வேறு)
உம் காரியம், இதுகாலவரையில், எவருமே செய்யமுடியாத
செய்திராத ஓர் காரியமாகும். இதை விட்டும் இல்லை! மாயாவும்
இல்லையென்றால் என்னவென்று சொல்வது?

வைத்தியம் :— ஓம் அருமை யோக மஹாத்மாஜி!
இதை **பர** கருணையினால்; **யோகமாயா!**
செய்யும் காரியமாகும் என சொல்லலாம். (கொண்டு மகிழ்ந்து,
அனுபவம் பெற்று வரும், யோகி சொன்னதாவது?)






(அவர்களைப் பார்த்து)

ஸ்ரீ யோகி :— ஐயா! மஹாத்மாக்களே! இவர், யோகஸம்ஸித்திக்கும், தேவை இல்லையெனச் சொல்லி, முறையே! ஆத்மஞானம் அடையும் நிலையில் சர்வார்ப்பண நிலையில் ஸ்ரீபகவானிடம் பரிபூரணசரணாகதியை! செய்து, இந்த, கலியுக தோஷகால நிவர்த்தியின் நிமித்தமாக, அந்த பர அம்சமாக, வந்தவர் என்று, எம் ஸ்ரீலக்ஷ்மிதேவமும்! மற்றும் இவரும்! சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

(வைஷ்ணவம் இடைமறித்து) ஐயா! மஹாத்மாக்களே! இந்த ஏழையை, மன்னியுங்கள்! உங்கள் ஆற்றலின் முன் யாம் ஓர், தாஸியே! உங்களைப் போன்ற ஸ்ரீமஹான்களின் ஸ்ரீபாத தரிசனமும்! ஸ்பரிசனமும்! நான் எம்பாக்கியம்! உங்கள் ஆற்றல் என்ற யாகத்தின்! முன் நிற்கும்,



(58)

ஓர் பூனையாகும்! திரி கர்த்தாக்களும், அதீதமானவர்கள் தாங்களும் உங்கள் மூதாதையர் நவகோடி ஸித்தர்களின், தெய்வங்களோ, பிரம்ம திருஷ்டிகளே, அம்பாளிடமும் அந்நியமானவர்களே,

மீ எங்கே? மூ எங்கே? இங்கு அவ்விருவரும் இடை மறித்தனர்) ஓ மஹாத்மாவான பாபாஜீ!

உங்களை புகழ எங்களுக்கு வாக்கு வர வில்லை!
" " " வாக்கும் இல்லை!!
" " " தகுதியும் இல்லை!!!

இப்படியே பேசினர், நாங்கள் இருக்க மாட்டோர்கள் என்பதும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

நாங்கள் அனைவரும், எவ்விடமும் பணிந்ததே இல்லை. ஆனால் உம் பணிவின்! ஆற்றலின் முன் நாங்கள் அனைவரும், பணிந்து விட்டோம்.

உங்கள் அன்பான, பணிவு! எங்களுக்கும் வர வேண்டுகிறோம். ஆசி வழங்குங்கள்.

பாபா.

அன்பின் குடில்

எல்லாம் நீ!

Abode of Love

You Are Everything!